
## திராவிடத்தால் வாழ்கிறோம்

963

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்


## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

22

ஓவியம் : ரவி பேலட்

# தமிழ்வழிக் கல்வி- உறுதியாக நின்ற கலைஞர்!



கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!

**2014**-ஆம் ஆண்டு, தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டம் - 2006-இன் படி, மெட்ரிகுலேஷன் பள்ளிகள் உள்பட, தமிழ் மொழிப் பாடம் கட்டாயம் என்கிற அரசாணைக்குத் தடை விதிக்கக்கோரி, சிலர் உயர்நீதிமன்றம் சென்றனர். அந்த வழக்கில் பதில் அளிக்க கோரி, தமிழ்நாடு அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியது நீதிமன்றம்.

அதாவது, 2006-ஆம் ஆண்டு, கலைஞர் ஆட்சியில் இருந்தபோது கொண்டு வந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழ் மொழிப் பாடத்தைக் கட்டாயமாக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக, சிலர் மனு தாக்கல் செய்தனர். குறிப்பாக, 2006- 2007 கல்வியாண்டில் இருந்து படிப்படியாக, ஒன்றாம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரையில், தமிழ் பயிற்றுவிக்கப்பட்டு, 2015-16 கல்வியாண்டில் அவர்களுக்கு பொதுத்தேர்வில் தமிழ் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். அந்த நிலைக்கு எதிராகத்தான் தனியார் பள்ளிகள் நீதிமன்றம் சென்றன. வழக்கம்போல ஜெயலலிதா அரசு, நீதிமன்றத்தில் வலுவான வாதங்களை வைக்கத் தவறியது.

அந்தச் சூழலில் மிக நீண்ட அறிக்கையை வெளியிட்டு, தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டம் - 2006 வந்த பாதையை விளக்கியிருந்தார் கலைஞர். குறிப்பாக, 1967-ஆம் ஆண்டிலிருந்து கழகம் எடுத்த முயற்சிகளை எல்லாம் விளக்கி யிருந்தார்.

1967-ஆம் ஆண்டு அண்ணா கொண்டு வந்த தமிழ்ப் பயிற்றுமொழித் தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாத சூழல்கள், சட்டப்போராட்டங்களை எல்லாம் எடுத்துச்சொல்லி, 2006-ஆம் ஆண்டில் அதை வெற்றிகரமாக நடைமுறைக்குக் கொண்டு வந்ததை விளக்கியிருப்பார்.

### நீண்ட வரலாறு

தமிழ்நாட்டில், கழகம் முதன்முதலில் ஆட்சிப் பொறுப்பேற்ற 1967-ஆம் ஆண்டிலேயே, அடுத்த ஐந்தாண்டு காலத்திற்குள் தமிழ்நாட்டின் அனைத்துக் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்றுமொழியாகவும், பல்வேறு துறைகளில் நிர்வாக மொழியாகவும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு திட்டமிட்டது. அதற்கான தீர்மானத்தை, சட்டமன்றத்தில் நிறைவேற்றினார் பேரறிஞர் அண்ணா.

1968-ஆம் ஆண்டு ஜனவரி 23-ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இளங்கலை வகுப்பில் தமிழ் பயிற்றுமொழியாகக் கொண்டுவரப்பட்டது. 24.01.1968 அரசாணை எண்: 105, 'வட்டார மொழி அல்லது தாய்மொழி' இருமொழிக் கொள்கைக்கான அரசாணை மூலம், அது செயல்பாட்டுக்கு வந்தது.

அண்ணாவுக்கு பின்னர், ஆட்சிப் பொறுப்பேற்ற தலைவர் கலைஞர், 1969-1970-ஆம் ஆண்டிலிருந்து இளம் அறிவியல் வகுப்பிலும், தமிழ் பயிற்றுமொழியைக் கொண்டு வந்தார். தமிழில் பயிலும் மாண வர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்கு வதற்கான ஆணையையும் பிறப்பித்தார் கலைஞர். ஆனாலும், பல்வேறு சட்டச் சிக்கல்களால், அதை நிறைவேற்ற முடியாத நிலை இருந்தது.

1996-ஆம் ஆண்டு கலைஞர் தலைமையில், கழக ஆட்சி அமைந்ததும், அண்ணாவின் கனவை நிறைவேற்றும் வகையில், முயற்சிகளை எடுத்தார் கலைஞர்.

### நீதிபதி மோகன் குழு

தமிழ்நாட்டில் தொடக்கக் கல்வி முதல் மேற்படிப்பு வரை, தமிழை எவ்வாறு பயிற்சி மொழியாக அறிமுகப்படுத்துவது என்பதை ஆராய்ந்து, அரசுக்குப் பரிந்துரை அளிப்பதற்காக நீதிபதி மோகன் தலைமையில், ஒரு குழுவை உருவாக்கினார் கலைஞர்.

அந்தக் குழு தமிழ் அறிஞர்களோடும் பொதுமக்களோடும் விவாதித்து, அதனடிப்படை யில் சில பரிந்துரைகளை அரசிடம் அளித்தது. அந்தக் குழு, மெட்ரிகுலேசன் மற்றும் ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளின் கருத்துகளையும் கேட்டறிந்துதான் பரிந்துரைகளை அளித்தது.

> பயிற்றுமொழியாகத் தமிழ் அல்லது தாய்மொழி இருக்கலாம் என்று விளக்கமாக மற்றொரு அரசாணை வெளியிட்டார்.

அதன்படி, 27.11.1998 அன்று, அரசாணை எண்: 421-இன்படி அனைத்து நர்சரி மற்றும் மழலையர் பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாக அறிமுகப்படுத்த வேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. அதனை நடைமுறைப்படுத்து வோருக்கு பதிவுக் கட்டணம் போன்றவற்றில் 50 சதவிகித சலுகையும் அறிவிக்கப்பட்டது.

அதன்பின்னர், 13.01.1999 அன்று அரசாணை எண்: 6-இன் படி கணக்கு, விஞ்ஞானம், சமூகவியல் ஆகிய மூன்றில் இரண்டு பாடங் களைத் தமிழிலேயே நடத்தும் பள்ளிகளுக்கு மட்டுமே அங்கீகாரம் புதுப்பிக்கப்படும் என்றும், தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு நடத்திடும் நர்சரி மற்றும் மழலையர் பள்ளிகளுக்கு பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும் என்றும் ஆணை பிறப்பித்தார் கலைஞர்.

13.10.1999 அன்று அரசு வெளியிட்ட ஆணைக்கு எதிராகத் தனியார் பள்ளிகள், மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதுடன், ஆங்கில வழிப் பள்ளி நிர்வாகிகளின் கூட்டமைப்பு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது.

### உயர்நீதிமன்ற வழக்கு

'தமிழ்நாடு அரசின் உத்தரவு, மாணவர்கள், பெற்றோர்களின் உரிமையைப் பறிக்கிறது' என்றும், தங்கள் குழந்தைகளுக்கு எத்தகைய கல்வியைத் தரவேண்டும் என்பதைத் தேர்ந் தெடுக்கும் உரிமை தங்களுக்கு உள்ளது என்றும் வாதிட்டனர். குறிப்பாக, மனித உரிமை குறித்த சர்வதேச மாநாடு தீர்மானத்தின் படி, தங்கள் பிள்ளைகள் எந்த மொழியில் படிக்கவேண்டும் என்பதை முடிவு செய்யும் உரிமை தங்களுக்கே உள்ளது என்று, வாதங்களை முன்வைத்தனர்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம், 07.06.1999 அன்று அளித்த தீர்ப்பில், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத மாணவர்களுக்கு அந்த ஆணை பொருந்தாது என்றும் தெரிவித்தது.

'பயிற்றுமொழியாகத் தமிழைக் கட்டாயமாக்கி, அரசு வெளியிட்ட உத்தரவு தெளிவாக இல்லை. முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. இது அரசியல் சட்டத்தின் 14-வது பிரிவுக்கு எதிராக உள்ளது' என்று கூறி அரசாணை செல்லாது என அறிவித்தது.

அதையடுத்து, 27.01.2000 அன்று, 13.01.1999 அன்று வெளியிட்ட அரசாணையைத் திருத்தம் செய்த கலைஞர், பயிற்றுமொழியாகத் தமிழ் அல்லது தாய்மொழி இருக்கலாம் என்று விளக்கமாக மற்றொரு அரசாணை வெளியிட்டார்.

1968-ஆம் ஆண்டு இருமொழிக் கொள்கைக் காக அண்ணா கொண்டு வந்த அரசாணையில் தமிழ் என்ற வார்த்தை இடம் பெறவில்லை என்பதால், உருவான சட்டச் சிக்கல்களைக் களையும் விதமாக, 'தமிழ் அல்லது தாய்மொழி' என்று அந்தத் திருத்தம் தெளிவான வரையறை அளித்தது.

...தொடரும்

## மனிதத்தைத் தாண்டி வேறில்லை!



உத்தரகாண்ட் மாநிலத்தில் 2 நாட்கள் விடுப்பு எடுத்தார் என 7 வயது சிறுவன் மீது பள்ளி ஆசிரியர்கள் இருவர் இணைந்து கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர். சிறுவன் இஸ்லாமியர் என்பதால், தாக்குதல் நடத்தப்பட்டதாக பெற்றோர் குற்றம்சாட்டி யுள்ளனர். அதேபோல, குஜராத்தில் 19 வயது சிறுவனை சட்ட விரோத காவலில் வைத்து, 10 நாட்கள் கடுமையாகத் தாக்கிய காவலர்கள் 4 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசம் மாநிலம் ஷாஜகான்பூரில், நபிகள் நாயகம் குறித்தும், குரான் குறித்தும் மிக மோசமாகப் பதிவிட்டது சமூகப் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. 11 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் பா.ஜ.க. ஆளும் வடமாநிலங்களில் இத்தகைய சம்பவங்கள் இயல்பாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால். கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் இதற்கு நேரெதிரான நிகழ்வு ஒன்று நடந்திருக்கிறது.

சத்தீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த ராஹ்கி என்ற 41 வயது பெண், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, திருவனந்தபுரத்தில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். நோயின் தீவிரம் காரணமாக அவர் குடும்பம், முகவரி உள்ளிட்ட அனைத்தையும் மறந்துவிட்டார். உயிரிழந்த பிறகு 'தன்னுடைய உடலை இந்து மத வழக்கப்படி அடக்கம் செய்ய வேண்டும்' என்று கூறியுள்ளார். இந்நிலையில் சிகிச்சை பலனில்லாமல் சில தினங்களுக்கு முன்பு அவர் உயிரிழக்கவே, அவரது இறுதி விருப்பதை நிறைவேற்றியுள்ளார் கடிஞம்குளம் ஊராட்சியின் கவுன்சிலரான சஃபீர்.

இஸ்லாமியரான சஃபீர், உயிரிழந்த ராஹ்கியின் எண்ணப்படி, இந்து மத சடங்குகளைக் கடைப்பிடித்து, இறுதி மரியாதை செலுத்தி, உடலை அடக்கம் செய்துள்ளார். அந்தப் புகைப்படம் மற்றும் வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலானது. சஃபீரின் செயலைப் பலரும் பாராட்டி உள்ளனர். தென் மாநிலங்களின் இந்தச் சமூக நல்லிணக்க மனநிலை வடக்கு நோக்கியும் பரவட்டும்!

## ஃப்ளாஷ்பேக்



### வழிநடத்திக் கொண்டிருக்கும் கழக உணர்வு!



எஸ்.எஸ்.எ.வல்லபாய்

ராமநாதபுரம் ஒருங்கிணைந்த மாவட்டமாக இருந்தபோது, எனது பெரியப்பா எஸ்.எஸ். தென்னரசு அவர்கள் மாவட்டச் செயலாளராக இருந்த காலகட்டத்தில், சிவகங்கை - திருக்கோஷ்டியூருக்கு வருகை தந்த கழக முன்னோடிகள் படம். (வலமிருந்து) பேரறிஞர் அண்ணா, என்.வி.என், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், மதுரை முத்து அவர்களுடன் எனது தந்தையார் எஸ்.எஸ்.அருணாச்சலம்.கழகப் பணிகளுக்காக பெரியப்பா திருமணம் செய்யாமல் இருந்ததால், அவரை திருமணம் செய்ய வலியுறுத்தும்படி அண்ணாவிடம், குடும்பத்தினர் கேட்டுக்கொண்ட தாக, இந்தப் படத்தின் நினைவுகளை அப்பா பகிர்ந்துகொள்வார். கழகத்தின் தென் மண்டல அமைப்புச் செயலாளராக இருந்த 'சிறுகதை மன்னன்' எஸ்.எஸ்.தென்னரசு அவர்கள், பெரிய தந்தை என்பதில் பெருமையும், அவர்களிடமிருந்து பெற்ற கழக உணர்வு என்றென்றைக்கும் கடமையாகவும் என்னை வழிநடத்திக் கொண்டிருக்கிறது.

**– எஸ்.எஸ்.எ.வல்லபாய், மாவட்டச் சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர், சிவகங்கை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### சட்டமன்றக் கட்சிப் பொறுப்பாளர்கள்!

1957-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்னர், சென்னையில் தி.மு.கழக எம்.எல்.ஏ. எம்.பி.க்கள் கூட்டம் மார்ச் 31-ஆம் தேதி நடைபெற்றது. கூட்டத்தில், சட்டமன்றக் கட்சிக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைவராகவும், பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் துணைத் தலைவராகவும், கலைஞர் அவர்கள் 'கொறடா'வாகவும் ஏ.கோவிந்தசாமி, எம்.பி.சுப்பிரமணியம் ஆகியோர் செயலாளர்களாகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131